உ

கடவுள் துணை.

சிதம்பரம்

நடராஜபதிமாலை.



சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

நடராஜபதிமாலை.

அருநிலைவிளங்குஞ் சிற்றம்பலமெனுஞ்
சிவசுகாதீத வெளிநடுவிலே
யண்டபகிரண்ட கோடிகளுஞ்சராசரமனைத்துமவை
யக்கன் முதலாம்
பொருணிலைச்சுத்தரொடு சத்திசுளனந்தமும்
பொற்பொடு விளங்கியோங்கப்
புறப்புறமகப்புறம் புறமகமிவற்றின்மேற்
பூரண காரமாகித்
தெருணிலைச்சச்சிதா னந்தநிரணாதிகள்
சிறப்பமுத லந்தமின்றித்
திகழ்கின்றமெய்ஞ்ஞான சித்தியனுபவநிலை
தெளிந்திட வயங்குசுடரே
சுருமலர்க்குழலம்மை யானந்தவல்லிசிவ
சுந்தரிக் கினியதுணையே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 1

என்னிய லுடம்பிலே யென்பிலேயன்பிலே
யிதயத்திலே தயவிலே
என்னுயிரிலே யென்றனுயிரினுக்குயிரிலே
என்னியர்க் குணமதனிலே
இன்னியலென்வாக்கிலே யென்னுடையநாக்கிலே
யென்செவிப் புலனிசையிலே
தன்னியலின்னறிவிலே யறிவினுக்கறிவிலே
தானேகலந்து முழுதுந்
தன்மயமதாக்கியே தித்தித்தென்மேற்
றதும்பிநிறை கின்றவமுதே
துன்னியபெருங்கருணை வெள்ளமே
யழியாதசுகமே சுகாதீதமே
சுத்தசிவசன்மார்க்கநிதியே யருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 2

உடலெலாமுயிரெலா முணர்வெலா
முள்ளென வெலாங்கலந்தே
ஒளிமயமதாக்கியிரு ணீக்கியெக்காலத்து
முதயாத்த மானமின்றி
இடலெலாம்வல்லசிவ சத்திகிரணங்கியாய்
ஏகமாய் ஏகபோக

இன்பநிலையென்னுமொரு சிற்சபையினடுவே
யிலங்கிநிறை கின்றசுடரே
கடலெலாம்புவியெலாம் கனலெலாம்வளியெலாங்
ககனெலாங் கண்டபரமே
காணுதபொருளெனக் கலையெலாம்புகலவென்
கண்காணவந்தமெய்ப் பொருளே
தொடலெலாம்பெறவனுக் குள்ளும்புறத்தும்
மெய்த்துணையாய் விளங்குமறிவே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 3

மெய்தழைபருள்ளங் குளிர்ந்துவகைமாறுது
மென்மேற் கலந்துபொங்க
விச்சையடிவோங்கவென் னிச்சையறிவனுபவம்
விளங்கவரி வரிவதாகி
உய்தழைவளிந்ததெலாம் வல்லசித்ததுதந்
துவட்டாதுளுறியூறி
யூற்றெழுந்தனையான் தானுக்கியென்னுள்ளே
உள்ளபடி யுள்ளவமுதே
கைதழையவந்தவாள் கனியேயெலாங்கண்ட
கண்ணே கலந்தநடுவே

கற்பனையிலாதோங்கு சிற்சபாமணியே
கணப்பருங்கருணை நிறைவே
துய்தழைக்கப்பித்தழைத்தரிவேயருட்
சுகபோக யோகவுருவே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 4

எண்ணில ரண்டத்தின் முதலிலே
யிடையிலே கடையிலேமேல்
ஏற்றத்திலே யவையுளூற்றத்திலே
யெய்துவடிவந் தன்னிலே
கண்ணுருவருவிலே யுருவிலேகுருவிலே
கருவிலே தன்மைதனிலே
கலையாதிநிலையிலே சத்திசத்தாகிக்
கலந்தோங்குகின்றபொருளே
தென்னிலாக்காந்தமணி மேடைவாய்க்
கோடைவாய்ச் சேர்த்தனுபவித்தசுகமே
சித்தெலாஞ்செயவல்ல தெய்வமேஎன்மனதை
திருமாளிகைத்தீபமே
துண்ணுருச்சாந்தசிவ ஞானிகளுளத்தே
சுதந்தரித் தெளிசெய்யொளியே

சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 5

ஆம்புவியிலேபுவியினடியிலேமுடியிலே
யம்மண்டலந் தன்னிலே
யகிலத்திலேபுவியி னகிலத்திலேயவைக்
காணவடிவாசிதனிலே
விம்பமுறவே நிறைந்தாங்கவைநிகர
விளக்குமவை யவையாகியே
மேலுலகவையவையாகிய வையவையலாத்தொரு
மெய்ந்நிலையுமான பொருளே
தம்பமிசையெனையேற்றி யமுதூற்றியழியாத்
தலத்திலுறவைத்தவரசே
சாகாதவித்தைக் கிலக்கணவிலக்கியந்
தானுமிருந்த பரமே
தொம்பதமுமுட னுற்ற தற்பதமுமசிபதச்
சிகமுமொன் றானசிவமே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 6

நீரிலேநீருற்ற நிறைவிலேநிறையுற்ற
நிலையிலே நுண்மைதனிலே

நிகழ்விலேநிகழ்வுற்ற நிகழ்விலேநிழலிலே
நெகிழிலே தண்மைதனிலே
ஊரிலேயந்நீரி னுப்பிலேயுப்பிலுறு
மொண்சுவையிலே திசையிலே
யுற்றநீர்க்கீழிலே மேலிலேநடுவிலே
யுற்றிய லுருத்து மொளியே
காரிலேயொருகோடி பொழியினுந் துணைபெறாக்
கருணைமழைப் பொழிமேகமே
கனகசபைநடுநின்ற கடவுளேசிற்சபைக்
கண்ணோங்கு மொருதெய்வமே
தூரிலேபலமளித் தூரிலேவளர்கின்ற
சுகசொரூபமானதருவே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநடராஜபதியே. 7

ஒள்ளியநெருப்பிலே யுப்பிலேயொப்பிலா
வொளியிலே சுடரிலேமே
லோட்டிலேசூட்டிலே யுள்ளாடுமோட்டிலே
யுறுமாதி யந்தத்திலே
தெள்ளியநிறத்திலே பருவத்திலேபெலாஞ்
செயவல்ல செய்கைதனிலே

சித்தாய்விளங்கியுப சித்தாயசித்திகள்
சிறக்கவளர்கின்ற வொளியே
வள்ளியேசிவானந்த மலையேசுகாதீத
வானமே ஞானமயமே
மணியேயென்னிரு கண்ணுண் மணியே
என்னுயிரேஎன்வாழ்வே என்வாழ்க்கைவைப்பே
துள்ளியமனப்பேயை யுள்ளுறவடக்கி
மெய்ச்சுகமெனக் கீந்த துணையே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜமணியே.

நடராஜபதிமாலை
முற்றிற்று.